

# கடை விரித்தோம், கொண்டு சென்றவர்கள் யார்?

சண்முக கவச நேயர்களே! இது என்ன புரியாத ஒரு தலைப்பாக உள்ளதே என்று நினைக்கிறீர்களா? நமது வள்ளல் பெருமான் “கடை விரித்தேன் கொள்வார் யாரும் இல்லை” என்றார். இதன் உள் அர்த்தம் என்னவென்றால் ஆன்மிக சிந்தனை மக்களிடத்தில் சொன்னால் இதைப் புரிந்து கொண்டு செயல்படுபவர்கள் மிகச் சிலரே என்பதாகும். சென்னையிலிருந்து வடக்கே சுமார் 40 கி.மீ. தொலைவில் உள்ள புது கும்மிடிப்பூண்டி என்ற இடத்தில் சுமார் 1400 வருடங்களுக்கு முற்பட்ட அருள்மிகு தெய்வநாயகி உடனுறை அருள்மிகு சந்திரசேகரர் திருக்கோயில் உள்ளது. சுமார் 40 வருடங்கள் யாதொரு பூஜையும் இல்லாமலும், மிகவும் சிதிலம் அடைந்தும் காணப்பட்டு, மூடிய நிலையில் இருந்தது. அடியேனும் மற்றும் சில ஆன்மிக சிந்தனை உள்ளவர்களுகம் ஒன்று கூடி இக்கோயிலுக்கு மஹா கும்பாபிஷேக விழா நடத்த விரும்பி சுமார் 6 மாதங்களுக்கு முன்பு தீர்மானித்தோம்.



**இந்தக் கோயிலின் ஸ்தல வரலாறு:**

அருள்மிகு தெய்வநாயகி உடனுறை அருள்மிகு சந்திரசேகரர் திருக்கோயில், சோழர்களால் கட்டப்பட்டது. பல்லவர்கள் காலத்திலும் பராமரிக்கப்பட்டு, பூஜைகள் செய்யப்பட்டன என்பதை இக்கோயிலில் உள்ள கல்வெட்டுகளின் மூலம் அறிய முடிகிறது. பல நூற்றாண்டுகளுக்கு முற்பட்ட புராதனக் கோயிலாக விளங்குகிறது. ஶ்ரீசந்திரசேகரரின் லிங்கத் திருமேனி கிழக்கு முகமாக அமைந்துள்ளது. இத்தலத்து சிவனை தரிசித்தால் தட்சிணாமூர்த்தியின் அருளும் பரிபூரணமாகக் கிட்டும் என்பதும் ஆன்றோர் வாக்காக உள்ளது.

இறைவன் தட்சிணாமூர்த்தியின் அம்சத்துடனும், இறைவி துர்கையின் அம்சத்துடனும் விளங்குவதால் இத் திருக்கோயிலில் துர்கை மற்றும் தட்சிணாமூர்த்தி உருவங்கள் தனியே அமைக்கப்படவில்லை என்பது இத்தலத்தை தரிசிக்க வரும் ஆன்மிகப் பெரியவர்களின் எண்ணமாக விளங்கியது. ஆனால்

ஜீர்ணோத்தாரண அஷ்டபந்தன மஹா கும்பாபிஷேகத்தின் போது புதிய சிலைகள் அமைக்கப்பட்டுள்ளன என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம். கணபதி, வள்ளி தேவசேனா சமேத ஆறுமுக சுவாமி, நடராஜர், சிவகாமசுந்தரி, சண்டிகேஸ்வரர், பைரவர் போன்ற தெய்வத் திருமூர்த்தங்கள் தரிசித்தவுடன் அருள்பாலிப்பனவாக விளங்குகின்றன. நவகிரகங்களும், உற்சவத் திருமேனிகளும் மிகுந்த பொலிவுடன் விளங்குகின்றன.



இராஜேந்திர சோழன், கங்கையை வெற்றி பெற்று "கங்கை கொண்ட சோழ" னாகிய மாபெரும் வெற்றியை நினைவுபடுத்தும் வண்ணம் இந்தப் பகுதியில் வாழ்ந்த குறுநில மன்னர்கள் ஒன்று சேர்ந்து, இத்தலத்தில் இச்சிவன் கோயிலை நிறுவினார்கள். அதற்குப் பின் வந்த பல மன்னர்கள் காலத்திலும், விஜயநகரப் பேரரசர்களின் ஆட்சிக் காலத்திலும் இக்கோயில் சிறப்புடன் விளங்கியுள்ளது.

**புராண தலவரலாறு :**

கயிலையில் ஒரு பிரதோஷ நாளன்று துர்வாசர் சிவபெருமானைத் தரிசிக்கச் சென்று கொண்டிருந்தார். இதையறிந்த அன்னை உமையவள் நந்திதேவரை அழைத்து "நந்திதேவரே! துர்வாச மகரிஷி இன்று இந்த பிரதோஷ வேளையில் கயிலை நாதராகிய சிவனை தரிசித்து சில வரங்களைப் பெற வந்து கொண்டிருக்கிறார், அந்த வரங்களால் பின்பு கயியாயபதிக்கும் ஆபத்து நேரலாம். எனவே இன்று துர்வாச மகரிஷி சிவபிரானை தரிசிப்பதை நீர் தடுத்து நிறுத்த வேண்டும், " என்று கட்டளையிட்டார். சிறிது நேரத்தில் துர்வாச முனிவர் நந்திதேவரின் முன்வந்து நின்றார். "நான் கயிலை நாதனைக் காண வந்துள்ளதாகத் தெரிவிக்கவும் " என்று கூறினார். நந்திதேவரோ, "இன்று யாரும் பெருமானைக் காண இயலாது," என்று தெரிவித்தார், முன்கோபத்திற்குப் பெயர் பெற்ற துர்வாச முனிவர் "நான் வந்ததைச் சொல்ல இயலுமா? இயலாதா?," என்று வினவினார். அதற்கு நந்திதேவர், "இன்று நீங்கள் பெருமானைத் தரிசிக்க இயலாது," என்று தடுத்துவிட்டார். சினம் கொண்ட துர்வாசர், "கயிலை நாதனை தரிசிக்க விடாமல் என்னைத் தடுத்த நீயும், உனக்கு இவ்வாறு செய்யச் சொல்லிக் கட்டளையிட்ட உமையவளும் சிறிது காலம் சிவனைப் பிரிந்து வாழ வேண்டும்,'' என்று சாபமிட்டார். இந்நிகழ்ச்சியை ஞானத்தால் உணர்ந்த அம்பிகை, துர்வாசர் முன் தோன்றி, "நான், நான் என்று அகந்தையுடன் இருக்கும் நீ சிறிது


சிவத்தமிழ் குகமணி
தெ. தனபால்

Email : thiruppalli@yahoo.com Cell : 9444958526


காலம் உன் நிலை மறந்து பூலோகத்தில் வாழ வேண்டும்," என்று சபித்தாள்.

அம்பிகையின் சாபத்தை எண்ணி வருந்திய துர்வாசரின் முன் நாரதர் தோன்றி, "திருப்பாற்கடலில் பள்ளி




## ஆன்மிகப் பாதையில் செல்லும் சண்முக கவசம் படிக்கும் நேயர்களுக்கு ஒரு புதிய நற்செய்தி

சண்முக கவசம் இதழில் வரும் ஸ்ரீமத் பாம்பன் சுவாமிகள் செய்திகள் தாங்கள் எப்போது வேண்டுமானாலும் படித்துக் கொள்ள இன்றைய விஞ்ஞானத் துறையில் மிகப் பெரிய வசதியை நாம் பெற்றுள்ளதால் இனிமேல் தாங்கள் கீழ்வரும் இணைய தளத்தில் படித்துத் தெரிந்துகொள்ள நமது குழுக்களில் உள்ள ஸ்ரீமத் பாம்பன் சுவாமிகள் திருப்பள்ளியெழுச்சி மன்றம் இதைச் செய்ய முன் வந்துள்ளது என்பதை நாங்கள் தங்களுக்கு தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளோம். அந்த இணைய தளத்தின் பெயர் பின்வருமாறு :

www.pambanswamigal.net or www.pambanswamigal.org

மேலும் விவரங்களுக்கு : Email: thiruppalli@yahoo.com or 94449 58526

கொண்டிருக்கும் நாராயணனிடம் தங்கள் வருத்தத்தைத் தெரிவியுங்கள், அவர் உங்களுக்கு உரிய பரிகாரம் சொல்லுவார்," என்று கூறிவிட்டு, கயிலையில் பிரதோஷ காலத்தில் சிவபெருமானை தரிசிக்கச் சென்றுவிட்டார். துர்வாச முனிவர் ஸ்ரீமந்நாரயணனிடம் நடந்தவற்றைக் கூற, அதற்கு ஸ்ரீமந்நாரயணன் "துர்வாசரே! நீங்கள் பூலோகத்துக்குச் சென்று உங்கள் திருக்கரங்களால் சிவபிரதிஷ்டை செய்து, சிவநாமம் சொல்லி பூஜித்து வாருங்கள், தகுந்த நேரத்தில் சிவன் உங்களுக்குக் காட்சியளிப்பார்," என்று வாழ்த்தியருளினார்.

துர்வாச முனிவர் உடனே பூலோகத்திற்கு வந்து, அமைதியான இடத்தைத் தேடி தன் கைகளாலேயே ஒரு சிவலிங்கத்தைப் பிரதிஷ்டை செய்து, இடைவிடாமல் ஐந்தெழுத்து மந்திரத்தை உச்சரித்து பூஜைகள் செய்து வந்தார். ஆண்டுகள் பல சென்ற பின்பு அவர் முன் சிவபெருமான் தோன்றி, "உனக்கு என்ன வரம் வேண்டும் கேள்!", என்று கேட்டார். துர்வாசர், சிவனின் பாத கமலங்களில் விழுந்து வணங்கி, தன் தவற்றிற்காக மன்னிப்புக் கோரினார். அவரை மன்னித்த சிவபெருமான், "உன் சாபத்தின்படி நந்திதேவர் சிலகாலம் என்னைப் பிரிந்திருந்தார். தட்சனின் யாகத்தில் கலநது கொண்ட உமையவளும் என்னைப் பிரிந்திருந்தாள். எப்போதும் என் திருநாமம் சொல்லி, என்னைப் பூசித்த உனக்கு வேண்டிய வரங்களைக் கேட்கலாம்" என்று கூறினார்.

துர்வாசர், "ஒரு பிரதோஷ நாளன்று உம்மை தரிசிக்க வந்து, என்னுடைய ஆணவத்தால் (நான் என்னும் சிந்தனை ) சாபம் பெற்று, தற்போது அகங்காரம் அழிந்த நிலையில் உள்ளேன். அதுபோல், இந்தத் தலத்திற்கு வந்து உங்களை தரிசிக்கும் பக்தர்களின் கோரிக்கைகளை நிறைவேற்றித் தரவேண்டும். இத்திருக்கோயிலில் பிரதோஷ காலத்தில் அருளுவதைப் போலவே, என்றென்றும் எப்போதும் தாங்கள் அருள்பாலிக்க வேண்டும்," என்று வரம் கேட்டார்.

உமா மகேஸ்வரராகிய சிவபெருமானும், "உன்னுடைய எண்ணம் போல், இத்தலத்திற்கு வந்து என்னை தரிசிக்கும் பக்தர்களின் வேண்டுதல்களை எப்போதும் நிறைவேற்றி வைப்பேன்," என்று திருவாய் மலர்ந்தருளினார். இத்தகு சிறப்பு வாய்ந்த திருத்தலம் துர்வாச முனிவரால் பிரதிஷ்டை செய்யப்பட்டு பூஜிக்கப்பட்ட சிவத்தலம் ஆகும்.

**மஹா கும்பாபிஷேகம் :**

இப்படி இருந்த திருக்கோயிலைப் புதுப்பிக்க முதலில் அருள்மிகு சந்திரசேகரர் அருள் நெறி மன்றம் என்று தொடங்கி இதனை சட்டப்படி பதிவு செய்தோம். பிறகு இக்கோயில் தர்மகர்த்தாவாகிய திரு. G.T. முத்துக்குமார சுவாமி அவர்களையும், கோயில் மேலாளர் திரு. S.இலட்சுமிகாந்தன் அவர்களையும் கலந்து ஆலோசித்து சுமார் 21 பேர் கொண்ட ஒரு குழுவினை அமைத்தோம். இதில் முக்கிய அங்கத்தினராக திரு. M.A. இரத்தினவேலு, ஆடிட்டர் மற்றும் திருமதி. M. துளசி கணபதி அவர்கள் செயலாளராகவும் பணியாற்றினர். பின்பு ஸ்தபதி திரு.G.R.செல்வம், கூத்தியம் பேட்டை, சீர்காழி தாலுக்கா - அவர்கள் இக் கோயிலின் திருப்பணிகளைச் செய்து தருவதாக ஒப்புக் கொண்டார். பல்வேறு இன்னல்களுக்கும் இடையில் இக்கோயிலில் புதையல் இருப்பதாக அவ்வூரில் உள்ள ஒருவர் கூற, அந்த ஊர் மக்களும் இக்கோயிலில் புதையல் இருக்கும் இடத்தைத் தோண்டிப் பார்க்க வேண்டும் என்று கூறினார்கள். இதற்கு அந்தக் கோயில் மேலாளர், இணை ஆணையர், துணைக் காவல் கண்காணிப்பாளர், வட்டாட்சியர் மற்றும் முக்கிய பிரமுகர்கள் முன்னிலையில் குறிப்பிட்ட இடத்தை இடித்து ஆய்வு செய்ய அதில் ஒன்றும் இல்லை என்ற முடிவுக்கு வந்தனர்.

இறைவன், நினைந்து உருகும் அடியாரை சோதிப்பான் என்பது பெரியவர்களின் வாக்கு, இதற்கு ஏற்றாற் போல் இம்மன்றத்தின் செயலாளர் திருமதி. துளசி கணபதி அவர்களும், தர்மகர்த்தா திரு.G.T. முத்துக்குமார சாமி செட்டியார் அவர்களும் சொல்லுவதற்கரிய பல இன்னல்களைச் சந்தித்தனர். மன்றத்தின் உறுப்பினர்கள் அனைவரும் இந்த நற்பணியில் பொருள் உதவி செய்தும், உடல் உழைப்பாலும் பெரும் பங்காற்றினர். இந்த சூழ்நிலையை உணர்ந்த பல பண்பான தெய்விகப் பெரியவர்கள் தங்களால் ஆன பொருள் உதவியை இக் கோயிலுக்குச் செய்தனர். இரவு பகல் என்று பாராமல் திரு. M.A. இரத்தினவேலு, ஆடிட்டர் மற்றும் திருமதி V. துளசி கணபதி அவர்களும் பணியற்றினர். ஸ்தபதி திரு. G.R.செல்வம், கூத்தியம் பேட்டை, சீர்காழி தாலுக்கா அவர்களும் இக்கோயிலின் திருப்பணிகளை நிறைவாகச் செய்து கொடுத்தார்கள். சண்முக கவசம் மாத இதழ் பதிப்பாளர் திருமதி. சங்கரி சண்முகம், வில்லிவாக்கம் வேல்முருகன் டெக்ஸ்டைல்ஸ் அதிபர் திரு. முருகேச பாண்டியன் ஆகிய இருவரும் முன்வந்து, இறைவனுக்கும் மற்றும் விக்கிரக மூர்த்திகளுக்கும் தேவையான புதிய பட்டாடைகளை வழங்கினார்கள். இத்தலத்தில் மிகப்பெரும் மழைபொழிந்து, அடியார் பெருமக்களை மிகவும் சிரமத்திற்கு உள்ளாக்க வைத்தது. மறுநாள் கணபதி ஹோமம் நடக்க அடியார் பெருமக்கள் இறைவனிடம் இந்த மழையை சிறிது நிறுத்தினால் மிகவும் நலமாக இருக்கும் என்று வேண்ட, அதற்கு அருள்மிகு தெய்வநாயகி உடனுறை அருள்மிகு சந்திரசேகரர் அருள்பாலித்ததால் அன்று பகல் முதல் மழை நின்றது. இதற்கு சிகரம் வைத்தாற் போல திரு. சுவாமிநாத குருக்கள் ஸ்தானிகர், சிவஸ்ரீ ம.ந. சங்கராத்மஜ சிவாச்சாரியார், சர்வசாதகர் தலைமையில் சுமார் 50 வேத விற்பன்னர்களை வைத்து இக்கோயிலில் உள்ள ஒவ்வொரு விக்கிரகத்திற்கும் ஒரு யாககுண்டம் அமைத்து நான்கு வேதங்கள் சொல்லவும், நால்வர் பெருமக்களின் பாடலாசிய தேவார இன்னிசை முழங்கவும், ஸ்ரீமத் பாம்பன் குமர குருதாச சுவாமிகள் அருளிய பாடல்களை திருமதி. பிரேமா திருஞானம் தலைமையில் இன்னிசைப் பாடல்களாகப் பாடி பரவசமூட்டினார். மேலும் கலைமாமணி கோவை நடராஜன் மற்றும் சீடர்களின் கீ போர்டு இசை நிகழ்ச்சி சிறப்புற நடைபெற்றது. முனைவர் M.A. மாணிக்க வேலு அவர்கள் கும்பாபிஷேக நிகழ்வுகளை தனக்கே உரிய அழகிய நேர்முக வருணனை சொல்லவும், மேளதாளங்களுடன் கும்பாபிஷேக விழா 01.12.11



வாருங்கள் வரவேற்கிறோம்
வாழ்த்துங்கள் வளர்கிறோம்
☎ : 4263 9220
2617 4848
புடவைகளின் சாம்ராஜ்யம்
சூட்டிங் சர்ட்டிங் ரகங்களின் அரசன்

வேல் முருகன்
டெக்ஸ்டைல்ஸ் & டிரஸ்ஸஸ்

நெ. 3 &60, ரெட்டித்தெரு, வில்லிவாக்கம், ( பஸ் நிலையம் அருகில் ) சென்னை – 49.

☎ : 5263 9221

வேல் முருகன் டிரஸ் வேல்டு

நெ. 60, பாலியம்மன் கோயில் தெரு, வில்லிவாக்கம், சென்னை -49.

*சிறுவர் முதல் பெரியவர் வரை குழந்தை மற்றும் மங்கையருக்கான அனைத்து ரெடிமேட் ஆடைகள் மற்றும் உள்ளாடைகள், கிஃப்ட் ஆர்ட்டிக்கிள்ஸ் வாங்க கைராசியான ஸ்தாபனம்*


வியாழக்கிழமை அன்று காலை 8.59க்கு மிகச் சிறப்பாக நடந்தேறியது.

அருள்மிகு தெய்வநாயகி உடனுறை அருள்மிகு சந்திரசேகரர் திருக்கோயிலில் சுமார் 40 ஆண்டுகளுக்குப் பிறகு நடைபெற்ற இம் மஹா கும்பாபிஷேகத்தின் முடிவில் 10 வயது முதல் 14 வரை உள்ள குழந்தைகள் இன்னிசை நிகழ்ச்சி நடைபெற்றது. அருள்மிகு தெய்வநாயகி உடனுறை அருள்மிகு சந்திரசேகரர் திருக்கல்யாணம் நடந்தேறியது. பஞ்ச மூர்த்தி புறப்பாடு இரவு 11 மணிக்கு புறப்பட்டு புதுகும்மிடிப்பூண்டி மாட வீதி முழுவதும் வலம் வந்து மறுநாள் காலை 6 மணி அளவில் திருக்கோயிலை அடைந்தது.

ஆன்மிகப் பெரியவர்களே... நாங்கள் அனைவரும் அருள்மிகு தெய்வநாயகி உடனுறை அருள்மிகு சந்திரசேகரர் திருக்கோயில் மஹா கும்பாபிஷேகம் என்ற கடையை விரித்தோம். இதில் இறைவனுடைய அருளை வாரிச்செல்ல இரண்டு கைகள் போதவில்லை. “இறைவா! இந்த ஆன்மிகப் பணியில் இணைந்து எங்களுக்கும் எங்களுடைய வாரிசுகளுக்கும் இது போன்ற பணியை மேலும் தரவேண்டும். இப்போது கும்பாபிஷேகப் புனித நீரை நாங்கள் இந்தத் திருக்கோயிலிலிருந்து எடுத்துச் செல்கிறோம். ஆகையால் இவர்கள் அனைவரும் இறைவனின் அளவிடப்பட முடியாத அருளை வாங்கிச் சென்றார்கள் என்று நினைக்கும் போது என்ன மா தவம் செய்தனை நெஞ்சமே!” என்றும் நினைக்கத் தோன்கிறது.

“தானமும் தவமும் தான் செய்வராயின் வானவர் நாடு வழிதிறந்திடுமே” என்பது தமிழ் அவ்வைப் பிராட்டியின் வாக்கு. திருத்தலத்திற்கு பலர் தானம் செய்ததால் இவர்களுக்கு வானவர் நாடு வழிதிறந்திருக்கிறது.

அத்தியாச்சிரம சுத்தாத்துவித வைதிக சைவ சித்தாந்த ஞானபானு பாம்பன் ஸ்ரீமத் குமர குருதாச சுவாமிகள் நான்காம் மண்டலத்தில் 68ஆவது ஞானவாக்கியமாக... “தைவகர்மத்தில் எய்தின் இழிவு இல்லை'' என்கிறார். இதன் உட்பொருள் தெய்வ காரியங்களில் தம்மை ஈடுபடுத்திக் கொள்பவர்க்கு ஒருநாளும் தாழ்வில்லை என்பதாகும்.

அமர்நீதி நாயனார் இது பற்றிக் கூறும் போது “சிவ அடியார்களுக்கும், சிவ காரியங்களுக்கும் கருத்து அறிந்து உதவி செய்தால், வந்த செல்வத்தின் வளத்தினால் வருகின்ற பயன் கொள்வார்” என்றார்.

ஆன்மிக அன்பர்களே! இத்தலம் சிறப்புற அமைய தானம் செய்தவர்கள், தொண்டுகள் பல புரிந்தவர்கள், ஆகம விதிகளின்படி மஹா கும்பாபிஷேகம் செய்தவர்கள், இறைவனைக் கண்ணாரக் கண்டு மகிழ்ந்தவர்கள், மிகப் பெரும் புண்ணியம் கொண்டு சென்றவர்கள் ஆவர். இதுவரையில் தாங்கள் இந்த புண்ணிய காரியத்தில் கலந்து கொள்ளவில்லையே என்று வருத்தம் வேண்டாம், மேலும் இராஜ கோபுரம், கொடிமரம், சுற்று மதில் சுவர் அமைக்கும் திருப்பணிகளில் கலந்து கொண்டால் நீங்களும் இந்த புண்ணியத்தைக் கொண்டு செல்லலாம். தொடர இருக்கும் இத் திருப்பணிகளிலும் நீங்களும் பங்கு கொள்ளுங்கள், அம்மையும், அப்பனுமாகிய தெய்வநாயகி, சந்திரசேகரர் ஆகியோரின் திருவருளைப் பெற்று வாழ்வில் வளமும் நலமும் பெறுங்கள் என வேண்டுகிறோம்.